# மன்னாரில் இராணுவம் மீது தாக்குதல் 13 இராணுவத்தினர் பலி



11.8.84

மன்னாரில் அமைந்துள்ள தள்ளாடி இராணுவ முகாம் தமிழ் இளைஞர்களைச் சித்திரவதை செய்வதில் பேர் பெற்ற முகாமாகும். மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த தமிழ்க் கிராமங்களிலிருந்து தள்ளாடி இராணுவ முகாமுக்கு கொண்டு வரப்படுகிற தமிழ் இளைஞர்களைப் பற்றிய தகவல்கள் வெளித்தெரிய வருவதேயில்லை. மிகவும் பின் தங்கிய இந்தத் தமிழ்க்கிராமங்களிலிருந்து கைது செய்யப்பட்ட தமிழ் இளைஞர்கள் சட்டத்தரணிகளை அணுகவோ, பெற்றோரைச் சந்திக்கவோ அனுமதிக்கப் படாத நிலையில் உள்ளே அனுபவிக்கும் சித்திரவதைகள் சொல்லில் அடங் காதவை.

இந்த இனவெறி பிடித்த இராணுவமுகாமை சேர்ந்த படையினர் மீது எமது கெரில்லா வீரர்கள் நடத்திய வெற்றிகரமான தாக்குதல் எமது ஆயுதப் போராட்டத்தின் புதியபரிமாணத்தைக் காட்டுகிறது.

மன்னார்—பூநகரி பிரதான பாதையில் நிலக்கண்ணி சகிதம் எமது அதிரடிப்படையினர் மேற்கொண்ட தாக்குதலில், நிலக்கண்ணி

வெடித்து அதில் சென்று கொண்டிருந்த 13 வீரர்கள் அந்த இடத்திலேயே மரணமானார்கள். அவர்கள் பயணம் செய்த இராணுவஜீப் ஆகாயத்தில் 30 அடி உயரம் வரை சிதறுண்ட நிலையில் தூக்கி எறியப்பட்டது.

•